**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

**முன்னிலை : திரு M. சந்திரமோகன்., B.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் கார்த்திகைத் திங்கள் 25-ம் நாள்

2025-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ம் நாள் வியாழக்கிழமை

******

**அசல் வழக்கு எண். 168/2017-ல் இடைமனு எண்.4/2025**

வேணுகோபால் .....மனுதாரர்/வாதி

...எதிர்....

ஜெயராமன் ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 01.12.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் S.சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் R.ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

அசல் வழக்கு எண் 168/2017ல் உள்ள நிரூபண வாக்குமூலத்தை அ.வ.எண்.169/2017 வழக்கிற்கும், அசல் வழக்கு எண் 169/2017ல் உள்ள நிரூபண வாக்குமூலத்தை அ.வ.எண்.168/2017 வழக்கிற்கும் மாற்றி பதிவு செய்து கொள்ள கோரியும், அல்லது இரண்டு வழக்குகளிலும் புதிய நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்ய அனுமதி வேண்டியும், மனுதாரர்/வாதியால் இம்மனு உ.வி.மு.ச. பிரிவு 151-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம் :**

(i) எதிர்மனுதாரர்/பிரதிவாதி, மனுதாரர்/வாதியிடம் 06.04.2015 அன்று

CHANDRAMOHAN M.
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.12.11 20:07:03 +0530

ரூபாய் 50,000/- கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு ஒரு கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்தும், மேலும், 11.12.2014 அன்று ரூபாய் 80,000/- கடனாக பெற்றுக்கொண்டு அதற்கும் ஒரு கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்ததாகவும், வாதி 06.04.2015ம் தேதியிட்ட ரூ.50,000 (ஐம்பதாயிரம்) தொகைக்கான நோட்டை பொருத்து OS.No.168/2017 வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும்,

(ii) 11.12.2014 தேதியில் பிரதிவாதி பெற்றுக்கொண்ட 80,000 கடன் தொகைக்கான கடனுறுதி சீட்டை பொருத்து OS.NO.169/2017 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், இரண்டு அசல் வழக்குகளும் ஒரே நாளில் விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டதாகவும், அதன் விளைவாக கவனக் குறைவாகவும் Over Sight காரணமாகவும் அசல் வழக்கு எண் 168/2017க்கான என் நிரூபண வாக்குமூலம் அசல் வழக்கு எண் 169/2017 வழக்கு கோப்பில் பதிவாகிவிட்டதாகவும்,

(iii) அதே போல் ரூ. 80000க்கான 11.12.2014 தேதியிட்ட கடனுறுதி சீட்டு வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் அசல் வழக்கு எண். 169/2017ல் பதிவு செய்வதற்கு பதிலாக அசல் வழக்கு எண். 168/2017ல் பதிவாகி விட்டதாகவும், மேற்படி தவறுகை தீர்ப்புகளுக்கு பிறகு தான் தெரிய வந்ததாகவும், இரண்டு வழக்குகளிலும் மயிலாடுதுறை முதன் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ததாகவும், அசல் வழக்கு எண் 168/2017க்கான மேல்முறையீட்டு வழக்கு A.S.No.23/2019 என்றும், அசல் வழக்கு எண் 169/2017க்கான மேல்முறையீட்டு வழக்கு எண் AS.No.21/2019 என்றும்,

(iv) மேற்படி இரண்டு வழக்குகளிலும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி கடனுறுதி சீட்டுகளை தான் எழுதிக் கொடுக்கவில்லை என்றும், கடனுறுதி சீட்டில் உள்ளது தன்னுடைய கையெழுத்து இல்லை என்றும் கட்சி எடுத்துள்ளதால் இரண்டு வழக்குகளிலும் உள்ள கடனுறுதி சீட்டுகளையும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள வக்காலத்துகள் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள எதிர்வாதியின் கையெழுத்து ஆகியவற்றை

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.12.11 20:07:08 +0530

கையெழுத்து நிபுணரிடம் ஆய்வுக்கு அனுப்ப உத்தரவிட்டு அதன் பிறகு வழக்குகளில் தீர்வு காண வேண்டும் என்று கூறி இரண்டு வழக்குகளும் சமூகம் நீதிமன்றத்திற்கு 21.09.2021 அன்று தீர்ப்புகள் வழங்கப்பட்டு அனுப்பப்பட்டதாகவும்,

(v). இரண்டு வழக்குகளிலும் நிரூபண வாக்குமூலங்கள் மாற்றி தாக்கல் செய்யபட்டுவிட்டதாகவும், அதன் அடிப்படையில் நீதிமன்றம் வாதி தனது வழக்கை நிரூபிக்கவில்லை என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளதாகவும், சார்பு நீதிமன்ற உத்தரவுப்படி பிரதிவாதியின் வக்காலத்துகள், நிரூபண வாக்குமூலங்கள், கடனுறுதிச் சீட்டுகள் ஆகியவை மட்டுமே கையெழுத்து நிபுணர்க்கு ஆய்வுக்கு போதுமான ஆவணங்கள் இல்லை என்பதால் சம காலத்தில் ஏற்பட்ட பிரதிவாதியின் கையெழுத்து உள்ள ஆவணங்களும் அனுப்பப்பட வேண்டும் என்றும்

(vi). அவ்வாறு அனுப்பினால் தான் கையெழுத்து நிபுணர் ஆய்வு செய்ய இயலும் என்றும் பல்வேறு உயர்நீதிமன்ற தீர்ப்புகள் உள்ள நிலையில் சம கால ஆவணங்களை தாக்கல் செய்யுமாறு பிரதிவாதிக்கு உத்தரவிட வேண்டி சமூகம் நீதிமன்றத்தில் வாதி இடைமனு எண்.01/2022 என்ற நம்பரில் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், அவ்வாறு கோருவது மேல்முறையீட்டு தீர்ப்புக்கு முரணாக உள்ளது என்ற அடிப்படையில் மேற்படி மனுக்கள் இரண்டு வழக்குகளிலும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகவும்,

(vii) மேலும் சார்பு நீதிமன்றம் குறிப்பிட்ட வக்காலத்துகள், நிரூபண வாக்குமூலங்கள், கடனுறுதி சீட்டுகள் மட்டும் இரண்டு வழக்குகளிலும் தனித்தனியாக ஆய்வுக்கு அனுப்ப சமூகம் நீதிமன்றம் உத்தரவிட்டதால் அதன்படி இரண்டு வழக்குகளிலும் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு மேற்படி ஆவணங்கள் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டதாகவும்,

(viii) அதற்கு வழக்கறிஞர் ஆணையருக்கான ஊதியத்தையும் இரண்டு

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.12.11 20:07:13 +0530

வழக்குகளிலும் செலுத்தியுள்ளதாகவும், இரண்டு வழக்குகளிலும் உள்ள மேலே குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் மட்டுமே ஆய்வு செய்வதற்கு போதுமானதல்ல என்பதால் ஆவணங்கள் சமூகம் நீதிமன்றத்திற்கு ஒரு கடிதத்துடன் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டதாகவும்,

(ix) சார்பு நீதிமன்ற உத்தரவு ஆவணங்களை ஆய்வு செய்வதை பொருத்து நடைமுறைப் படுத்த இயலாத நிலையில் வாதிக்கு வழக்கில் மிகுந்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்படுவதோடு கால விரையமும் ஏற்படுவதாகவும், எனவே இரண்டு வழக்குகளிலும் உள்ள நிரூபண வாக்குமூலங்களை மாற்றி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், நிரூபண வாக்குமூலங்களை மாற்றி பதிவு செய்து கொள்ள வேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளது என்றும், அல்லது இரண்டு வழக்குகளிலும் புதிய நிரூபண வாக்கு மூலத்தை தாக்கல் செய்ய வாதிக்கு அனுமதியளித்து உத்தரவிட கோரியும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**2. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :**</u>

(i) இம்மனுவின் மனுாரர், எதிர்மனுதாரர் மீது பிராமிசரி நோட்டிற்கு தொகை கிடைக்க வேண்டி வழக்கு தொடர்ந்ததில் அந்த தாவா வழக்கை சமூகம் கோர்ட் 01.02.2019 தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கிய பிறகு வாதி மயிலாதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் A.S.23/19 நம்பரில் மேல்முறையீடு தாக்கல் செய்ததாகவும், மேற்படி மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றம் A.S.23/19ல் 21.09.2021 அன்று சமூகம் நீதிமன்றத்தில் மறு விசாரணைக்கு மீள அனுப்பி தீர்ப்பு வழங்கியுள்ளதாகவும்,

(ii) மேற்படி A.S.23/19 வழக்கில் மீள அனுப்பிய தீர்ப்பில் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டை, பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வக்காலத்து, எ.சா.1 சாட்சியம் ஆகியவற்றில் உள்ள எதிர்வாதியின் கையெழுத்துகளை, கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெற வேண்டும் என தீர்ப்பு

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.12.11 20:07:18 +0530

வழங்கியுள்ளதாகவும், ஆனால் மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றம் A.S.23/19 நம்பரில் 21.09.2021 தேதியில் வழங்கிய தீர்ப்பு மாறாக பிரதிவாதியின் 06.04.2015 தேதிய சமகால ஆவணங்களை சமூகம் கோர்ட்டில் தாக்கல் செய்ய கோரிய வாதி I.A.No. 1/2022 மனு தாக்கல் செய்திருந்ததாகவும், மேற்படி I.A.No.1/2022 மனுவானது மேற்படி மேல்முறையீட்டு தீர்ப்பிற்கு மாறானது என்பதால் I.A.No.1/2022 மனுவை தள்ளுபடி செய்து சமூகம் கோர்ட் உத்தரவிட்டுள்ளதாகவும்,

(iii) மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றம் மேற்படி A.S.23/19 வழக்கில் மீள அனுப்பிய தீர்ப்பில் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டை, பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வக்காலத்து, எ.சா.1 சாட்சியம் ஆகியவற்றில் உள்ள எதிர்வாதியின் கையெழுத்துகளை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெற வேண்டும் என தீர்ப்பு வழங்கியுள்ளபோது தற்பொழுது இடை மனு எண் 2/2023 நம்பரில் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் உள்ள பிரதிவாதி கையெழுத்து, பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வக்காலத்து, எ.சா.1 சாட்சியம் ஆகியவற்றை கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப வேண்டும் என மனு தாக்கல் செய்து,

(iv) அந்த மனு அனுமதிக்கப்பட்டதில் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்து தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டதில் மேற்படி ஆய்வகத்தில் போதிய ஆவணங்கள் இல்லாததால் ஆய்வு செய்ய இயலாது என உத்தரவிட்டுவிட்டதாகவும், எனவே மேற்படி தடய அறிவியல் ஆய்வக உத்தரவு படி மேற்படி வழக்கில் தீர்வு காண வேண்டும் என்ற அடிப்படையில் தான் சார்பு நீதிமன்றம் சமூக நீதிமன்றத்திற்கு வழக்கை மீள அனுப்பியுள்ளது என்றும்,

(v) மேற்படி மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்ற A.S.No. 23/2019 வழக்கில் மீள அனுப்பிய தீர்ப்பில் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டை, பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வக்காலத்து, எ.சா.1 சாட்சியம் ஆகியவற்றில் உள்ள பிரதிவாதியின் கையெழுத்துகளை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.12.11 20:07:22 +0530

அறிக்கை பெற வேண்டும் என தீர்ப்பு வழங்கியுள்ள போது தற்பொழுது அசல் வழக்கு எண் 168/2017 உள்ள நிரூபண வாக்குமூலத்தை அசல் வழக்கு எண் 169/2017 வழக்கிற்கும், அசல் வழக்கு எண் 169/2017 உள்ள நிரூபண வாக்குமூலத்தை அசல் வழக்கு எண் 168/2017 வழக்கிற்கும் மாற்றி பதிவு செய்துக்கொள்ள மனுதாரர் மனு தாக்கல் செய்திருப்பதும்,

(vi) Reopen செய்ய மனு தாக்கல் செய்திருப்பதும் ஏற்க கூடியதல்ல என்றும், மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் இந்த மனுக்கள் மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்ற A.S.No. 23/2019 வழக்கில் மீள அனுப்பிய தீர்ப்பிற்கு விரோதமாக உள்ளதாகவும், வழக்கை Reopen செய்து நிரூபண வாக்குமூலத்தை மாற்றி அமைத்தால் மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்ற A.S.No. 23/2019 வழக்கில் மீள அனுப்பிய தீர்ப்பிற்கு விரோதமாக அமையும் என்றும்,

(vii) எனவே அசல் வழக்கு எண் 168/2017 உள்ள நிரூபண வாக்குமூலத்தை அசல் வழக்கு எண் 169/2017 வழக்கிற்கும், அசல் வழக்கு எண் 169/2017 உள்ள நிரூபண வாக்குமூலத்தை அசல் வழக்கு எண் 168/2017 வழக்கிற்கும் மாற்றி பதிவு செய்துக்கொள்ள சட்டப்படி இயலாது என்றும், வழக்கை Reopen செய்ய இயலாது என்றும். மனுவை எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை**

3. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்/வாதி மற்றும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5. தீர்வு:**

(i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுவானது அ.வ.எண்.168/2017ல் உள்ள நிரூபண

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.12.11 20:07:27 +0530

வாக்குமூலத்தை அ.வ.எண். 169/2017க்கும், அ.வ.எண்.169/2017ல் உள்ள நிருபண வாக்குமூலத்தை அ.வ.எண். 168/2017க்கும், மாற்றி பதிவு செய்து கொள்ள வேண்டும் அல்லது புதிய நிருபண வாக்குமூலத்தை தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டும் என்பதாகும்.

(ii) மேற்கண்ட அசல் வழக்கில் விசாரணை நடைபெற்று, கடந்த 01.02.2019ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதற்கு எதிராக வாதி தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டு, மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அந்த மேல்முறையீடு AS.23/2019 ஆக கோப்பில் எடுக்கப்பட்டுள்ளது. அந்த மேல்முறையீட்டு 21.09.2021 தேதியிட்ட தீர்ப்பில் தாவா அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு, எதிர்வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வக்காலத்து, எ.வா.சா.1 ன் சாட்சியம் ஆகியவற்றை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெற்று அதனடிப்படையில் அசல் வழக்கிற்கு தீர்வு காண வேண்டும் என்று இந்நீதிமன்றத்திற்கு மீள அனுப்பப்பட்டுள்ளது.

(iii) அதனடிப்படையில் மனுதாரர்/வாதி தரப்பில் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு, எதிர்வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வக்காலத்து, எ.வா.சா.1 ன் சாட்சியம் ஆகியவை கையெழுத்து நிபுணரின் அறிக்கைக்கு அனுப்பப்பட்டு ஆனால் மேற்கண்ட ஆவணங்கள் போதாது என்றும், எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் கையெழுத்துள்ள சமகாலத்திய ஆவணங்கள் அனுப்பப்பட வேண்டும் என்றும், அப்போதுதான் ஆய்வு செய்ய இயலும் என்றும், கையெழுத்து நிபுணருக்கு அனுப்பப்பட்ட ஆவணங்கள் திருப்பப்பட்டது.

அதனால் மனுதாரர்/வாதி தரப்பில் IA 01/2022 மனு தாக்கல் செய்து பிரதிவாதியின் சமகாலத்திய ஆவணங்கள் தாக்கல் செய்யுமாறு கோரப்பட்டு, அந்த மனுவானது மேல்முறையீட்டு வழக்கு எண். 23/2019 க்கு எதிராக இருப்பதால் இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட IA 01/2022 மனுவில் ஏற்பட்ட உத்தரவிற்கு எதிராக மனுதாரர்/வாதி தரப்பில் எவ்வித மேல்முறையீட்டு மனுவோ, அல்லது சீராய்வு

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.12.11 20:07:32 +0530

மனுவோ தாக்கல் செய்யப்படவில்லை.

(iv) மாறாக இந்த அ.வ.எண்.168/2017ல் உள்ள நிரூபண வாக்குமூலத்தை அ.வ.எண்.169/2017லிலும், அ.வ.எண்.169/2017ல் உள்ள நிரூபண வாக்குமூலத்தை அ.வ.எண்.168/2017லிலும் மாற்றி பதிவு செய்து கொள்ள வேண்டும் அல்லது புதிய நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவும் மேல்முறையீட்டு வழக்கு எண். 23/2019ன் தீர்ப்புக்கு எதிராக உள்ளது.

(v) ஏனென்றால் மேல்முறையீட்டு வழக்கு எண். 23/2019 தீர்ப்பில் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு, எதிர்வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வக்காலத்து, எ.வா.சா.1 ன் சாட்சியம் இவற்றை மட்டுமே கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெற்று அதனடிப்படையில் வழக்கை தீர்வு காண வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

(vi) எனவே இந்த மனுவானது மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவிற்கு எதிராக இருப்பதால் இந்த மனுவில் நற்கூறுகள் இல்லை என்பதன் அடிப்படையில் இந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**முடிவில்,** இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.12.11 20:07:37 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.12.11 20:07:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**<u>நேரிய/வரைவு உத்தரவு</u>**
அசல் வழக்கு எண்.168/2017
இடைமனு எண்.4/2025
நாள்.11.12.2025